சிந்தனை
தொகுதி V
இதழ் III, 1993

# கயிலாய வன்னியனார் மட தர்மசாதனப் பட்டையம் - சில வரலாற்றுக் குறிப்புக்கள்

சி. பத்மநாதன்

ஈழத்து வன்னிமைகளைப்பற்றி இது வரை மூன்று சாசனங்கள் கிடைத்துள்ளன. அம்மூன்றும் தமிழ்மொழியில் எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் கங்குவேலிக் கல்வெட்டு, வெருகற் கல்வெட்டு ஆகியவிரண்டும் சிலா சாசனங்களாகும்.[1] மற்றையது ''கயிலாய வன்னியனார் மடதர்ம சாதனப் பட்டையம்' என்ற செப்பேடாகும்.[2] மலையில் வன்னியனாரும் ஏழூர் அடப்பர்களுங் கூடித் 'தம்பிரானார் கோணைநாதனுக்கு' நில தானம் கொடுத்தமைபற்றிக் கங்குவேலிக் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. வெருகற் கல்வெட்டானது (சித்திர வேலாயுத சுவாமி) கோயிலின் தெற்குமதில் கயில வன்னியனார் உபயம் எனக் குறிப்பிடுகின்றது. வெருகற் கல்வெட்டிலே அது எப்போது எழுதப்பட்டது என்று குறிப்பிடப்படவில்லை. அதன் வரிவடிவ அமைப்பினைக் கொண்டு அது பதினாறாம் நூற்றாண்டிற்குரிய தென்று கூறப்பட்டுள்ளது. ஆயினும் வெருகற் கல்வெட்டுக் குறிப்பிடும் கயில வன்னியனார் எக்காலத்திற்குரியவர், எப்பகுதிகளிலே வன்னிபமாய் விளங்கினார் என்பவை ஆராய்தற்குரிய விடயங்களாகும்.

அடங்காப்பற்று வன்னிமைகளைப் பற்றி இதுவரை கிடைத்துள்ள வரலாற்று மூலங்களிலே 'கயிலாய வன்னியனார் மட தருமசாதனப் பட்டையம்' என்பது மட்டுமே சாசனமாகும். அது வன்னியர்களினாலே வழங்கப்பட்ட தானமொன்றினைக் குறிப்பிடுவதால் அடங்காப்பற்று வன்னிமைகள் பற்றிய ஆவணங்களிலே அது அதிக வரலாற்று முக்கியத்துவம் பெறுகின்றது. அது வரலாற்றுக் குறிப்புகளுடன் கள்ளியங் காட்டுச் செப்பேடுகள் என நூல்வடிவிலும் வெளியிடப்பெற்றுள்ளது.[3] அச்சாசனத்திலுள்ள சில வாக்கியங்கள் சரிவரப் புரிந்து கொள்ளப்படாதமையினாலும், வன்னிப் பிரதேசத்தின் வரலாற்றுமிச்சங்கள் நன்கு அறிந்து கொள்ளப்படாத காரணத்தினாலும் கள்ளியங்காட்டுச் செப்பேடுகள் வன்னி வரலாற்றிலே சில மையல்களை ஏற்படுத்தியுள்ளது. விஞ்ஞான நெறிகளுக்கமைய அடங்காப்பற்று வன்னிகளின் வரலாற்றினை ஆராய்ந்து அமைத்துக் கொள்வதற்கு அச்சாசனத்திலே வரும் குறிப்புக்கள் தொடர்பான விடயங்கள் சிலவற்றைத் தெளிவுபடுத்திக் கொள்வது அவசியமாகின்றது. மேலும் கொழும்பிலுள்ள ஆவணச்சுவடிகள் நிலையத்திலே கிடைக்கும் வன்னிமைகளைப்பற்றிய அதிமுக்கியத்துவம் வாய்ந்தனவும், வெளியிடப்படாதனவுமாகிய தமிழிலுள்ள ஆவணங்கள் இவ்விடயந் தொடர்பாக அதிக பயனுள்ளனவாகக் காணப்படுகின்றன.

## பட்டையத்தின் பெயர்

சில சாசனங்களை பொறுத்த வரையில் அவை கண்டெடுக்கப்படுகின்ற இடத்தினை அடிப்படையாகக் கொண்டு அவை பெயரி

டப்படுகின்றன. சோழப்பெரு மன்னரின் லைடன் செப்பேடுகளை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். முதலாம் இராசேந்திர சோழன் நாகபட்டினத்துப் பெளத்தப் பெரும் பள்ளிக்குக் கொடுத்த தானங்கள் பற்றிய செப்பேடுகள் லைடன் நகரிலே வைக்கப் பெற்றுள்ளதால் அவற்றை ஆங்கிலத்திலே லைடன் செப்பேடுகள் (Leyden Grant) என்று குறிப்பிடுவார்கள். ஆனால் அதே செப்பேடுகளை ஆனைமங்கலச் செப்பேடுகள் என்று தமிழிலே குறிப்பிடுவது வழமை. ஆனைமங்கலம் என்ற ஊரிலுள்ள நிலங்கள் தானமாகக் கொடுக்கப்பெற்றமையைக் குறிப்பிடுவதால் அவற்றை ஆனைமங்கலச் செப்பேடுகள் என்றும் வர்ணிப்பார்கள். கயிலை வன்னியனார் மடதர்ம சாதனப் பட்டையத்தைப் பொறுத்தவரையில் அது கள்ளியங்காட்டிலே கண்டெடுக்கப் பட்டுள்ளமையினால் அதனைக் கள்ளியங்காட்டுச் செப்பேடு எனப் பெயரிடுவது பொருத்தமானதாகத் தோன்றவில்லை. இச்சாசனத்தைப் பொறுத்தவரையில் அப்படியானதொரு பெயரை ஏற்படுத்திக் கொள்வதற்கே இடமில்லை. அதனைத் தயாரித்தவர்களே பட்டையத்தின் தலைப்பிலே அதற்குக் 'கயிலை வன்னியனார் மட தர்மசாதனப் பட்டையம்' என்று பெயரிட்டு எழுதியுள்ளார்கள். ஆகையால் அச்சாசனத்தை அதற்குரிய பெயரினைக் கொண்டு குறிப்பிடுவதே பொருத்தமான முறையாகும்.

## வன்னியர் கொடுத்த இரண்டு பட்டையங்கள்

'கயிலை வன்னியனார் மடதர்ம சாதனப் பட்டையம்' என்ற வாக்கியத்தை 1) கயிலை வன்னியனார் ஏற்படுத்திய மட தர்ம சாதனம் பற்றிய பட்டையம் 2) கயிலை வன்னியனார் மடம் பற்றிய தர்ம சாதனப் பட்டையம் என இருவாறாகப் பொருள் கொள்ளலாம். இவற்றுள் முதலாவது விளக்கத்தைப் பொருத்தமானதாகக் கொள்வோமாயின் கயிலைவன்னியனார் ஒரு காலகட்டத்திலே சிதம்பரத்திலே மடம்மொன்றுக்குத் தானங்கொடுத்து அறக்கட்டளை ஏற்படுத்தியிருந்தார் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். இரண்டாவது விளக்கமானது கயிலை வன்னியனார் மடம் என்ற நிறுவனமொன்றுக்குக் கொடுக்கப் பெற்ற தர்மசாதனம் பற்றியதே இப்பட்டையம் என்ற கருத்தினை வலியுறுத்தும். கயிலை வன்னியனார மடம் என்றவோர் நிறுவனம் சிதம்பரத்தில் இருந்தமைக்கு எதுவித சான்றுங் காணப்படாமையாலும், பட்டையத்தில் வருங் குறிப்பொன்றினாலும் பட்டையத்தின் பெயரைப்பற்றி இங்கு தரப்பட்ட முதலாவது விளக்கமே பொருத்தமானதென்பது தெளிவாகின்றது. இப்பட்டையத்திலுள்ள 'தங்கள் கயிலைப்பிள்ளை வன்னியனார் அவர்கள் மடதர்மத்துக்குத் தர்மசாதனப் பட்டையம் குடுத்தப்படி ..'[5] என்று சொற்றொடர் முன்பு கயிலைப் பிள்ளை வன்னியனார்' மடதர்மத்துக்கு தர்மசாதனப் பட்டையங் கொடுத்திருந்தார் என்பதைத் தெளிவுறுத்துகின்றது. இந்தத் தமிழ் வாக்கியத்தின் பொருள் நன்கு புரிந்து கொள்ளாதமையாற் கள்ளியங்காட்டுச் செப்பேடுகள் என்பதன் ஆசிரியர் மேல்வருமாறு எழுதியுள்ளார்.

> 'மேற்படி சாசனச் செய்தியைக் கவனிக்கும் போது இறந்த
> தலைவனின் நினைவாக அவனின் கீழ் இருந்த அதிகாரிகள்
> தானமொன்றை அளித்திருக்க வேண்டும் என அறிந்து கொள்ளலாம்.[6]

இக்கருத்துப் பொருத்தமானதா என்பது சிந்தனைக்குரியதாகும். பட்டையத்தில் அடங்கியுள்ள பிரதானமான தகவலொன்றை மறைத்துவிடும் தன்மையதாய் அது அமைந்துவிடுகின்றது. செப்பேட்டின் வாசகத்திற் குறிப்பிடப் பெற்ற வன்னிபங்கள் அனைவரும் கயிலைவன்னியனார் இறந்தபின் அவன் நினைவாக மடதர்ம ஏற்பாடுகள் புரிந்து அவற்றைக் குறிப்பிட்டுப் பட்டையங் கொடுத்தார்கள் என்ற கருத்தினைக் குறிப்பதாகச் செப்பேட்டின் வாச

RECEIVED

கம் அமைந்திருக்கவில்லை. இவ்விடயம் தொடர்பாகச் செப்பேட்டிலுள்ள பகுதி மேல்வருமாறு அமைந்துள்ளது.

'...வன்னியனாரவர்களும் இவர்களும் இவர்களைச் சேர்ந்த ஊரில் குடியான வர்களும் தங்கள் கயிலைப்பிள்ளை வன்னியனாரவர்கள் மடதற்மத்திற்குத் தற்ம சாதனப் பட்டையங் குடுத்தபடி கமத்துக்கு மூன்று மரக்கால் நெல்லு மடதற்மத்திற்குச் சந்திராதித்திய வரைக்கும் புத்திர பவுத்திர பாரம்பரியமுங் கொடுத்து வரக்கடவோமாகவும். இப்படிச் சம்மதித்துச் சூரிய மூர்த்தித் தம்பிரான் அவர்களுக்கு நாங்களெல்லாரும் தற்ம சாதனப் பட்டையங் கொடுத்தோம்...'

இதிலே அவதானமாகக் கவனிக்க வேண்டிய வாக்கியம்... கயிலைப்பிள்ளை வன்னியனார் அவர்கள் மடதற்மத்திற்குத் தற்ம சாதனப் பட்டையங் குடுத்தபடி... சம்மதித்து நாங்களெல்லாரும் தற்மசாதனப்பட்டையங் கொடுத்தோம்' என்பதாகும். இதன்படி மடதற்மத்திற்கென இரு தடவைகளாகப் பட்டையங்கள் கொடுக்கப்பட்டன. கயிலாய வன்னியனார் முன்பு பட்டையமொன்றினைக் கொடுத்திருந்தார். பின்பு அதை அனுசரித்து மீண்டுமொரு முறை பதினெட்டாம் நூற்றாண்டின் முதற்காற் கூற்றிலே ஐந்து வன்னிகளைச் சேர்ந்த வன்னியர்கள் மடதர்ம சாதனப் பட்டையங் கொடுத்திருந்தார்கள். கயிலாய வன்னியனார் கமத்துக்கு மூன்று மரக்கால் வீதமாக வன்னியிலிருந்து மடதர்மத்திற்கு நெல் கொடுப்பதாக உறுதியளித்துப் பட்டையங் கொடுத்திருந்தார்கள் என்பதையும், அதே தானத்தை உறுதிப்படுத்தும் வண்ணமாகத் தாமும் பட்டையங் கொடுப்பதாக இச்செப்பேட்டிலே குறிப்பிடப்பட்ட வன்னியர்கள் கூறுகின்றார்கள். பதினேழாம் நூற்றாண்டிலே பனங்காமப்பற்றின் வன்னிபமாய் விளங்கிய செல்வாக்கும், அதிகாரமும் பொருந்திய கயிலை வன்னியனை இச்செப்பேடு குறிப்பிடுகிறதென்பது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டதாகும்.

### சிதம்பரத்துப் பரராசசேகரன் மடமும் வன்னியரும்

அடங்காப்பற்று வன்னிமைகளின் வரலாறுபற்றிய பிரதானமான வேறுஞ்சில அம்சங்களை அறிந்து கொள்வதற்கு இச் செப்பேட்டிலுள்ள குறிப்புக்கள் உதவுகின்றன. அவற்றைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்குப் பட்டையத்தின் பிரதான பகுதியை இங்கு எழுதிக்கொள்வது அவசியமாகின்றது. வன்னிபங்கள் கொடுத்த நன்கொடை பற்றிய பகுதி மேல்வருமாறு உள்ளது.

'...பரராசசேகர மகாராசாவின் கட்டளை நடத்தும் சூரிய மூர்த்தித் தம்பிரானவர்களுக்கு பனைங்காமப்பத்து வன்னிபம் நிச்சயச்செயனாதிராய முதலியாரவர்களும் குலசேகர முதலியாரவர்களும் கரிக்கட்டு மூலைப்பத்துத் தென்னமரவடிப் பத்து வன்னிபம் புவிநல்லமாப்பாண வன்னியனாரவர்களும் புண்ணிப்பிள்ளை வன்னியனாரவர்களும் மேல்பத்து வன்னிபம் ரணசூர ரணதீரராக வன்னியராய முதலியாரவர்களும் கந்தயினா வன்வியனாரவர்களும் மேல்பத்து முள்ளிய வளை வன்னிபம் இலங்கை நாராயண முதலியாரவர்களும் மயிலாத்தை உடையாரவர்களும் பச்சிலைப்பள்ளி இறைசுவதோர் இலங்கை நாராயண முதலியாரவர்களும் நீலயினா வன்னியனாரவர்களும் மூத்தர் வன்னியனாரவர்களும் இவர்களைச் சேர்ந்த ஊரில்க் குடியானவர்களும் தங்கள் கயிலைப்பிள்ளை வன்னியனாரவர்கள் மடதற்மத்திற்குத் தற்மசாதனப் பட்டையங் குடுத்தபடி கமத்துக்கு மூன்று மாரக்கால் நெல்லு மடதற்மத்திற்குச் சந்திராதித்ய வரைக்கும் புத்திர பவுத்திர பாரம்பரியமுங் கொடுத்து வரக்கடவோமாகவும். இப்படிச் சம்மதித்துச் சூரிய மூற்த்தித் தம்பிரானவர்களுக்கு நாங்களெல்லாருந் தற்ம சாதனப் பட்டையங் கொடுத்தோந் தாங்களென்றென்றுந் தற்மத்தைப் பரிபாலனம் பண்ணி நடப்பித்துக் கொள்ளக் கடவராகவும்...'[8]

இச்சாசனம் யாழ்ப்பாணத்து மன்னர்களுக்கும் அடங்காப்பற்று வன்னிமைகளுக்கிடையிலான தொடர்பொன்றினையுந் தெளிவுபடுத்துகின்றது. பரராசசேகர மகாராசாவின் கட்டளை நடத்துகின்ற சூரிய மூர்த்தித் தம்பிரானவர்களுக்குப் பனங்காமம் முதலிய பற்றுக்களின் வன்னிமைகள் மடதர்ம சாதனம் பற்றிப் பட்டையங் கொடுத்தார்கள் என்பது செப்பேட்டின் கூற்றாகும். தம்பிரான் என்பது மடாதிபதிகளுக்குரிய பட்டப்பெயராகும். சிதம்பரத்திலே பராசசேகரன் என்ற யாழ்ப்பாணத்து அரசனொருவன் மடமொன்றை அமைப்பித்து அதற்கு அறக்கட்டளை ஏற்படுத்தியிருந்தான் என்பதைப் 'பரராசசேகரன் திருப்பணி கூறும் பட்டையம்' என்பதன் மூலமாக அறிய முடிகின்றது.[9] அம்மடம் அண்மைக்காலம் வரை சிதம்பரத்திலே நிலைபெற்றிருந்தது.

'பரராசசேகர மகாராசாவின் கட்டளை நடத்தும் சூர்ய மூர்த்திற் தம்பிரானுக்கு வன்னியர்கள் பட்டையங் கொடுத்தார்களென்று கயிலை வன்னியனார் மடதர்ம சாதனப் பட்டையங் கூறுவதால் வன்னியர்களின் தானத்தைப்பெற்ற மடம் பரராசசேகரனால் அமைக்கப்பட்ட மடமென்று கருதலாம். யாழ்ப்பாணத்து அரசர் குலமானது பறங்கியராலே அழிக்கப்பட்டதன் பின்பு யாழ்ப்பாணத்து அரசர்கள் சிதம்பரத்திலே ஏற்படுத்தி ஆதரவளித்து வந்த அறநிலையத்தினைப் பேணிக்காக்கும் பொறுப்பினை அடங்காப்பற்று வன்னியர்கள் பதினேழாம் நூற்றாண்டிலிருந்து – கயிலை வன்னியன் காலத்திலிருந்து மேற்கொண்டிருந்தார்கள் என்று கருதலாம். பதினெட்டாம் நூற்றாண்டின் முதற்காற் கூற்றிலே சூரிய மூர்த்தி என்ற பெயரையுடையவர் பரராசசேகரன் மடத்திற்குப் பொறுப்பாகவிருந்தார் என்பதையும் இச்செப்பேட்டின் வாயிலாக அறிய முடிகின்றது.

### *கயிலாய வன்னியன்*

கயிலை வன்னியனார் மடதர்மசாதனப் பட்டையத்தின் மூலம் அறியப்படுகின்ற இன்னுமொரு பிரதானமான தகவல் அடங்காப்பற்று வன்னிமைகளின் மீது கயிலை வன்னியனார் பெற்றிருந்த செல்வாக்கினைப் பற்றியதாகும். 'தங்கள் கயிலைப் பிள்ளை வன்னியனார் மடதற்மத்திற்கு தற்மசாதனப்பட்டையங் குடுத்தபடி கமத்துக்கு மூன்று மரக்கால் நெல்லு மடதற்மத்திற்குக் கொடுப்பதாக பனங்காமம் முதலிய பற்றுக்களின் வன்னிமைகள் உறுதியளித்துள்ளபடியாற் கயிலை வன்னியனார் பட்டையத்திலே குறிப்பிடப் பெற்று வன்னியர்கள் எல்லோரதும் அபிமானத்திற்கும் மதிப்புக்கும் உரியவனாய் இருந்தான் என்பது புலனாகின்றது. மேலும் எல்லா வன்னிமைகளின் சார்பிலும் அவன் கமத்துக்கு மூன்று மரக்கால் நெல்லு என்ற படியாக மடதற்மத்திற்கு நன்கொடை செய்திருந்தபடியால் அடங்காப்பற்று வன்னிகள் எல்லாவற்றின் மீதும் அவன் மேலாதிக்கம் பெற்றிருந்தான் என்று சிந்திக்க வேண்டியுள்ளது. ஆரியச்சக்கரவர்த்திகளின் குலம் அழிவுற்ற பின் யாழ்ப்பாணப்பட்டன இராச்சியத்திலே, மேல்நாட்டவரின் ஆதிக்கத்தின் கிழமையாத பகுதிகளிலே, அரசனுக்குரிய உரிமைகளையும். அந்தஸ்தினையும் கைலாய வன்னியன் பெற்றிருந்தான் என்று சிந்திப்பதற்கு இச்செப்பேடு இடமளிக்கிறது. அடங்காப்பற்று வன்னிமைகளின் மேல் அவன் மேலாதிக்க நிலையொன்றினை ஏற்படுத்தியிருந்தான் எனக் கொள்ளலாம். பதினேழாம் நூற்றாண்டிலே கண்டி இராச்சியத்திற் கைதியாக நெடுங்காலமிருந்து தப்பிச் சென்ற றொபர்ட் நொக்ஸ் அடங்காப்பற்று வன்னியைக் கயிலை வன்னியன் நாடு (Ceylon Wanni Country) என வர்ணித்துள்ளமையும் இக்கருத்தினை வலியுறுத்துகின்றது. கயிலை வன்னியனார் மடதர்ம சாதனப்பட்டையத்தின் முடிபிலே,

> '... இந்தச் சாதனமெழுதின நன்மைக்கு ...... கை எழுத்து இப்படிக்கு நிச்சயச் சேனாதிராய முதலியார்' என்ற சொற்றொடர் வருகையால் இப்பட்டையத்தை எல்லா வன்னியர்களின் சார்பிலும்

நிச்செயச் சேனாதிராய முதலி

யார் கொடுத்திருந்தார் என்று கொள்ள வேண்டியுள்ளது. எனவே கயிலை வன்னி யனாரின் காலத்திற்போலப் பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் பனங்கா மத்து வன்னியர் அடங்காப்பற்று வன்னி பங்கள் எல்லாருக்கும் அதிபர்களாயிருந்த னர் என்பதை இச்சாசனம் உணர்த்துகின் றது.

## அடங்காப்பற்றிலிருந்த பிற வன்னி பங்கள்

அடங்காப்பற்று வன்னிமைகளின் வர லாற்று மூலம் என்ற வகையிலே கயிலை வன்னியனார் மடதர்ம சாதனப்பட்டையத் திற்கு மேலுமொரு தனிச்சிறப்புண்டு குறிப் பிட்டவொரு காலப்பகுதியிலே அடங்காப் பற்றில் அதிகாரம் செலுத்திய வன்னிபங் கள் பெரும்பாலோரின் பெயர்கள் அதிற் போல வேறெந்த ஆவணத்திலும் இடம் பெறவில்லை. பதினேழாம் நூற்றாண்டிற் குரிய கொம்பனியதிகாரிகளின் அறிக்கைகள் வன்னிமைகளைப் பற்றிப் பல விபரங்களைக் கொண்டுள்ளபோதும் அவற்றுள் இப்பட்ட யத்தினைப்போல அதிகமான வன்னிபங்க ளின் பெயர்களைக் குறிப்பிடுவதாகத் தெரி யவில்லை. இந்த வகையிலே அப்பட்டையத் தின் முக்கியத்துவத்தை ஏற்றவகையிலே புரிந்து கொள்வதற்கு அதிற்குறிப்பிடப் பெற்ற வன்னிமைகளையும், வன்னிபங்களை யும் மேல்வருமாறு அட்டவணைப்படுத்திக் கொள்ளலாம்.

| வன்னிப்பிரிவு | வன்னிபம் |
|---|---|
| 1. பனங்காமம் | 1. நிச்செயச் சேனாதிராய முதலியார்<br>2. குலசேகர முதலியார் |
| 2. மேல் பத்து | 1. ரணசூர ரணதீரராக வன்னியனார்<br>2. கந்தயினா வன்னியனார் |
| 3. மேல்பத்து – முள்ளியவளை | 1. இலங்கை நாராயண முதலியார்<br>2. மயிலாத்தை உடையார் |
| 4. கரிக்கட்டு மூலை | 1. புவிநல்ல மாப்பாணர் |
| 5. தென்னமரவடி | 1. புண்ணிப்பிள்ளை |

செப்பேட்டிலே கருநாவற்பத்து குறிப் பிடப்படாதமை கவனத்திற்குரியதாகும். ஒல்லாந்தராட்சிக்காலத்திற்குரிய குறிப்புக் களெல்லாம் யாழ்ப்பாணப்பட்டன இராச் சியத்திலே ஆறு வன்னிகள் இருந்தனவென்று குறிப்பிடுவதோடு அவற்றுட் கருநாவற் பத்து தனிப்பிரிவாய் அமைந்திருந்ததென் றுங் கூறுகின்றன. செப்பேட்டிலே கருநா வற்பத்து குறிப்பிடப்படாதமை சிந்தனைக் குரியவொன்றாகும். பட்டையம் எழுதிக் கொடுக்கப்பட்ட காலத்திலே கருநாவற்பத் தில் வன்னிபம் என்ற பதவிபெற்ற எவரும் இல்லாதிருக்கலாம். அப்பத்திற்குரிய வன் னிபங்கள் நீக்கப்பெற்று புதிய வன்னிபங் கள் அவர்களினிடத்துக்கு நியமிக்கப்படாத கால இடைவெளியிலே பட்டையம் எழு தப்பட்டிருத்தல் கூடும். கருநாவற்பத்தும் அதன் வன்னிபங்களும் செப்பேட்டிலே குறிப் பிடப்படாதமைக்கான காரணம் மேற் கொண்டு ஆராயப்பட வேண்டிய ஒன்றா கும். இச்செப்பேடு எழுதப்பட்டகாலத்திலே மேல்பத்து இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட் டிருந்தது. அதன் ஒருபிரிவு முள்ளியவளை வன்னிபங்களான இலங்கை நாராயண முத லியார், மயிலாத்தை உடையார் ஆகியோ ரின் பொறுப்பிலே விடப்பட்டிருந்தது.

கயிலை வன்னியனார் மடதர்மசாதனப் பட்டையம் அது எழுதப்பட்டகாலத்தில்